**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி 29.07.2021—ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

**பொருள் எண் : 1**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜுன் 2021 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

**அலுவலக குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.50**

**தீர்மானம் :** பதிவுசெய்யப்பட்டது

(ஒப்பம்) இரா. அமுதா,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி 29.07.2021–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

**<u>பொருள் எண் : 2</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி நிதி நிலையை மேம்படுத்தும் பொருட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 18 வரை வார்டுகளில் உள்ள கட்டிடங்களுக்கு சொத்துவரி பெயர் மாற்றம் செய்யக் கோரும் விண்ணப்பங்களுக்கு கீழ்க்கண்டவாறு கிரையம் சொத்து மதிப்பின்படி சொத்துவரி பெயர் மாற்றம் கட்டணமாக 01.07.2021 முதல் வசூலிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | ரூ.1 முதல் 10,00,000/– வரை | : | ரூ.200/– |
| 2) | ரூ.10,00,001/– முதல் 15,00,000/– வரை | : | ரூ.300/ |
| 3) | ரூ.15,00,001/– முதல் 20,00,000/– வரை | : | ரூ.500/ |
| 4) | ரூ.20,00,001/– முதல் 25,00,000/– வரை | : | ரூ.1000/ |
| 5) | ரூ.25,00,001/– முதல் 30,00,000/– வரை | : | ரூ.1500/ |
| 6) | ரூ.30,00,001/– முதல் அதற்கு மேல் | : | ரூ.2000/ |

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.51**

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) இரா. அமுதா,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி 29.07.2021–ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

**<u>பொருள் எண் : 3</u>**

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை பணியில் தனியார் ஒப்பந்த அடிப்படையில் **1** முதல் **6** வார்டுகளில் **41** தூய்மை பணியாளர்கள் விபிஎன் பில்டர்ஸ், ஒப்பந்ததாரர், திருப்பூர் அவர்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந. க. எண்.**4861**/P3/**2018** நாள் **28.02.2018** அனுமதியின்படி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.**25/2016**/எச்**1** நாள் **06.06.2019**ன் படி பணி ஆணை வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.**25/2016**/எச்**1** நாள் **30.06.2019**ன் படி நீட்டிப்பு செய்து பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்கான ஒப்பந்த காலம் **30.06.2021** உடன் முடிவடைவதால் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், ஒப்பந்த தூய்மை பணியாளர் நபர் ஒன்றுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந. க. எண்.**9887/2020**/அ**2** நாள் **10.10.2020**–ன் படி Unskilled Labourers – Mazdoor – category I – Municipality Limit க்கு தினக்கூலி ரூ.**561.00** நிர்ணயம் செய்யப்பட்டதின்படி ஒப்பந்த பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் தனியார் முறைப்படுத்த கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி அனுமதி பெறவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந. க. எண்.**25/2016**/எச்**1**)
அலுவலகக் குறிப்பு :-
அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) பொது சுகாதாரபிரிவு அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.52**

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) இரா. அமுதா,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

**புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி 29.07.2021—ஆம் நாளன்று நடைபெற்ற தனி அலுவலரின் அவசரக்கூட்ட தீர்மான நகல்**

<u>**பொருள் எண் : 4**</u>

புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சிக்கு பவானிசாகர் மற்றும் அண்ணா நகர் நீரேற்று நிலையங்களில் குடிநீர் பராமரிப்பு பணிக்காக நான்கு நபர்களை தனியார் மூலமாக பணி அமர்த்தி கொள்ளும் பணிக்கு திரு.V.ஜெயராஜ் என்பவருக்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண். இ1/387/2017 நாள்.27.05.2020ல், 01.06.2020 முதல் 31.05.2021 வரை ஓராண்டு ஒப்பந்த காலத்திற்கு நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டதில், மேற்படி ஓராண்டு ஒப்பந்த காலம் 31.05.2021 உடன் முடிவடைவதால் தமிழக சட்ட மன்ற தேர்தல் அறிவிக்கப்பட உள்ள நிலையில் மேற்படி பணிக்கு புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோர கால தாமதம் ஆகும் என்பதால், குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணி என்பதால், பணியின் அவசர அவசியம் கருதி தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.V.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலை விகிதத்தில் இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண். இ1/387/2017 நாள்.19.02.2021ல், 01.06.2021 முதல் 31.08.2021 வரை ஒப்பந்த காலத்தை மேலும் மூன்று மாத காலத்திற்கு நீட்டித்து பணி ஆணை வழங்கப்பட்டது. தற்போது மேற்கண்ட ஒப்பந்தகாலம் 31.08.2021 உடன் முடிவடைவதால் குடிநீர் விநியோக பணி அத்தியாவசிய பணியாக உள்ளதால் தற்போதைய ஒப்பந்ததாரர் திரு.V.ஜெயராஜ் என்பவருக்கு பழைய விலை விகிதத்தில் மேலும் ஒரு மாத காலத்திற்கு 01.09.2021 முதல் 30.09.2021 வரை ஒப்பந்தத்தை நீட்டிப்பு செய்து குடிநீர் விநியோக பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந. க. எண்.387/2017/இ1)

**அலுவலக குறிப்பு:—**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.53**

**தீர்மானம் :** அனுமதிக்கப்பட்டது

(ஒப்பம்) இரா. அமுதா,
தனி அலுவலர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையாளர்,
புன்செய்ப் புளியம்பட்டி நகராட்சி.